**மே - 7**

**"சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ." - 1 கொரி 9 : 16**

நம்மிடமுள்ள அந்த மிக உத்தமமான செய்திகளை மற்றவர்களுக்குச் சொல்ல நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஜீவியத்தின் பல்வேறு சோதனைகளில் சிக்குண்டு புலம்பித்தவித்துக் கொண்டிருக்கும் சிருஷ்டியினிடத்தில் நமக்கிருக்கும் அநுதாபம், வரப்போகிற இராஜ்யம் சம்பந்தமாகவுள்ள கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும் அப்பொழுது உலகத்திலுள்ள சகலவம்சங்களுக்கும் கிடைக்கப்போகும் ஆசீர்வாதங்களையும் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட நம்மை நடத்த வேண்டும். யாராவது ஒருவர், ஒவ்வொரு தகுந்த சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நாளும் இவ்விதமாக வெளிப்படையாகத் தெரியப்படுத்தாவிட்டால், வெளிப்படுத்தப்பட்ட காரியங்களிலுள்ள அறிவின் குறைவாகவோ அல்லது விசுவாசத்தின் குறைவாகவோ அல்லது தன்னயமாகவோ இருக்க வேண்டுமென்று தெளிவாகிறது. கர்த்தர் அனுமதிக்கக் கூடாத இந்நிலையில் பிடிவாதமாய் நின்றால் முடிவாக இந்நிலை அவனுக்கு ராஜ்யத்தில் பங்கு கிடைப்பதைத் தடுக்கும். **-Z ’03, 174 (R 3204)**

சுவிசேஷம் என்றால், யேசுவிலும் யேசுவினாலும் உண்டாயிருக்கிற இரட்சிப்பின் நற்செய்திகளைக் குறிக்கும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குரிய வேலை ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருப்பது, ஒரு மானிட ஜீவியின் மிக உயர்ந்த சலுகையாக இருக்கிறது. இந்த வேலையின் ஆவியை பூரணமாக உடையவர்கள் தங்களுடைய செய்ய வேண்டிய வேலையைச் செய்யக் கூடாதவர்களாயிருக்கும் போது, தங்கள் இருதயத்தில் அதிக துக்கமடைகிறார்கள். இந்த வேலையின் பழக்கம் அவர்களுடைய குணங்களில் அவ்வளவு பூரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பதினால் அதை இழக்கும் போது, அவர்களுடைய இருதயம் துக்கமடைகிறது. **- P '36, 64.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 40:9,10; பிர 11:6; மாற் 8:38; 2தீமோ 1:8 ; எரே 1:17; 20:7,9; 23:29; ஆமோ 3:8; 7:15; யோவா 18:37; அப் 4:20; 9:6,15; 26:16-20; 1கொரி 1:18; 15:58; 2:4; 15:2; கொலோ 1:5; 1:6; 4:17; ரோம 1:14-16; 1தெச 1:5; 2தீமோ 4:2; எபி 4:12.

**கோபுர வாசிப்பு : Z ’16, 140 (R 5893).**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேனா? எப்படி? ஏன்? உதவியாயிருந்தது எது? அல்லது இடையூறாயிருந்தது எது? பலன்கள் என்ன?